**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**Crl.M.P.No.597 of 2026**
*********

முத்துக்குமார், வயது 44/2026,
த/பெ. முத்துராஜ்,
கதவு எண் 15, கொழுவை நல்லூர்,
ஆத்தூர்.
(தற்போது) அமுதா நகர், 2 ஆவது தெரு,
தூத்துக்குடி. . . . மனுதாரர்/எதிரி

...எதிர்...

**<u>அரசுக்காக :-</u>**
காவல் உதவி ஆய்வாளர்,
தட்டார்மடம் காவல் நிலையம்,
குற்ற எண்.155/2026. . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு பாரதிய நீதிச்சட்டம் பிரிவு 305 இன் கீழான குற்றத்திற்கு பிணை உத்தரவு நிபந்தனையை (Condition Modification) மாற்றம் செய்யக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கறிஞர் : திரு.அழகுராமகிருஷ்ணன்
எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : செல்வி. பிரீத்தி ராணி., உதவி அரசு வழக்கறிஞர்.

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் காவல்நிலைய குற்ற எண் 155/2026, பாரதிய நீதிச்சட்டம் பிரிவு 305 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் எந்த குற்றச் செயலிலும் ஈடுபடாமல் இருந்து வருவதாகவும், இந்நீதிமன்றம் மனுதாரருக்கு 22.05.2026 அன்று சி.ஆர்.எம்.பி எண்.547/2026 இன் படி பிணையம் வழங்கி உத்தரவிட்டிருந்ததாகவும், மேற்படி பிணை உத்தரவில் நிபந்தனையாக மனுதாரர் மறு உத்தரவு வரும் வரை தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் (தட்டார்மடம்) ஆஜராகி கையெழுத்து போட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்ததாகவும், மனுதாரருக்கு மற்றொரு வழக்கில் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஆஜராகி கையெழுத்து போட வேண்டி இருப்பதாலும், மேற்படி மனுதாரர் தற்போது அமுதா நகர், 2 ஆவது தெரு, தூத்துக்குடியில் வசித்து வருகிறார் என்றும், தூத்துக்குடியில் இருந்து தினமும் கையெழுத்து செய்ய சாத்தான்குளம் வருவதற்கு சிரமமாக உள்ளது என்றும், மனுதாரர் வேலை செய்து அவருடைய குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்து வருவதாகவும், அவர் தினமும் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையெழுத்து செய்தால் அவருடைய தொழில் பாதிக்கக்கூடும் என்றும், எனவே, பிணை உத்தரவு நிபந்தனையில் குறிப்பிட்ட, மனுதாரர் மறு உத்தரவு வரும் வரை தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் (தட்டார்மடம்) ஆஜராகி கையெழுத்து போட வேண்டும் என்ற நிபந்தனையை மட்டும் மாற்றி அவர் தூத்துக்குடியிலுள்ள தென்பாகம் காவல்நிலையத்தில் கையெழுத்து போட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் தரப்பில் கூறி, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:44:36 +0530

2. மனுதாரருக்கு பிணை உத்தரவு நிபந்தனை தளர்வு கொடுக்க எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேலும், இவ்வழக்கானது தற்போது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், வழக்கு சொத்துப்பொருள் கைப்பற்ற வேண்டி இருப்பதாலும், மனுதாரர் ஒரு நாள் கூட காவல்நிலையத்தில் கையெழுத்து போட வரவில்லை என்றும், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து தலைமறைவாகக்கூடும் என்றும் கூறி எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் பிணையில் வெளியே வந்த பிறகு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் இது நாள் வரை கையெழுத்து செய்யவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் மனுவானது நிலைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

4. முடிவில், மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் 05.06.2026 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:44:40 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS